2003 ஏப்ரல் 21]

பகுதிகளில் எங்கெங்கு 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேலாக வாக்காளர்கள் நடந்து செல்லவேண்டிய நிலை இருக்கிறதோ அவற்றையெல்லாம் ஆய்ந்து தேர்தல் ஆணையத்திற்கு அனுப்புவதற்காக தயார் செய்யும்படி அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். அப்படி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தயார் செய்து அரசுக்குத் தெரிவிக்கின்றபோது அதை உடனடியாக தேர்தல் ஆணையத்திற்கு அறிவித்து தேர்தல் ஆணையத்தின் மூலம் வாக்குச்சாவடிகளை, கூடுதல் வாக்குச்சாவடிகளை, ஏற்கெனவே இருக்கின்ற வாக்குச்சாவடிகளுக்குப் பக்கத்திலேயே அமைப்பதற்கு அரசு தக்க நடவடிக்கையை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 264, திரு. மா. ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

264—

ஜெராக்ஸ் நகல்கங்கள்

•5285—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீதிமன்றங்களில் நகலகங்கள் (ஜெராக்ஸ்) ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

அனைத்து மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் மற்றும் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களுக்கும் ஜெராக்ஸ் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மாநிலத்திலுள்ள அனைத்து சார்பு நீதிமன்றங்களுக்கும் ஜெராக்ஸ் இயந்திரங்கள் வழங்குவதற்கு அரசின் தற்போதைய நிதிநிலை மேம்பட்டதும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்ட

நீதிமன்றங்களுக்கும் ஜெராக்ஸ் இயந்திரங்கள் வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் அம்மா அவர்களுடைய அரசுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே அந்த ஜெராக்ஸ் இயந்திரங்களை இயக்குவதற்குத் தனியாக பணியாளர்கள் நியமிக்கும் எண்ணம் நம்முடைய அரசிற்கு உள்ளதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நம்முடைய பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதனைப் பராமரிப்பதற்கும், நிர்வகிப்பதற்கும் தனியாக ஒரு ஆளை நியமிக்கக் கேட்டுக் கொண்டுள்ளார்கள். நான் ஏற்கெனவே சொன்னதுபடி, சுவாமிநாதன் கமிஷன் பரிந்துரையின்படி மற்றத் துறைகளில் மிகுதியாகக் காணப்படுகின்ற ஊழியர்களை நீதிமன்றங்களுக்கு பீமீஜீஷீமீணீமீவீஷீஸீ செய்வதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. எனவே அது நிறைவேற்றப்பட்டவுடன் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் *265*, திரு. ப. ஆண்டிவேல், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

265—

கட்டடம்

***9485—திரு. ப. ஆண்டிவேல்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?